**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகளின் நலன் – தமிழகத்தில் உள்ள அரசு சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாற்றுத் திறனாளி மாணவ / மாணவிகளைக் கல்விச் சுற்றுலாவிற்கு அழைத்து செல்வது – ரூ.97,800/– நிதி ஒப்பளிப்பு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மா.தி.ந1(1)) துறை,**

**அரசாணை(நிலை) எண். 90** **நாள்.29.11.2010.**

**கார்த்திகை 13, திருவள்ளுவர் ஆண்டு 2041**

**படிக்கப்பட்டது:**

1. மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பு நாள் 13.05.2010.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடிதம் ந.க.எண்.5444/சி.ப.1/2010, நாள் 06.2010

---

**ஆணை:**

2010–2011ம் ஆண்டு மானியக் கோரிக்கையின் போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், ஏனைய அறிவிப்புகளோடு பின்வரும் அறிவிப்பும் செய்யப்பட்டது:-

2. ‘‘மாற்றுத் திறனாளிகளின் தனிப்பட்ட கல்வித் தேவைகளைக் கருத்தில் கொண்டு அமைக்கப்பட்டுள்ள அரசு சிறப்புப் பள்ளிகளில் 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகளுக்கு, ஆண்டுக்கு ஒரு முறை சுற்றுலா அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்படும்”.

3. மேலே 2–ல் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், இடைநிலைப் பள்ளிகளான கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளி மாணவ / மாணவியர்களுக்கான அரசு சிறப்புப் பள்ளி மற்றும் மனவளர்ச்சி குன்றிய மாற்றுத் திறனாளி மாணவ / மாணவியர்களுக்கான அரசு சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களைத் தவிர்த்து, பார்வைத்திறன் பாதிக்கப்பட்ட மற்றும் செவித்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளி மாணவ / மாணவியர்களுக்கான, 10 அரசு சிறப்புப் பள்ளிகளில் 9 ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் 489 மாணவ, மாணவியர்களை கல்விச் சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்வது தொடர்பாக, கருத்துருவை சமர்பித்துள்ளார்.

4. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், மேலும் தனது கருத்துருவில், இப்பள்ளிகளில் பயின்று வரும் மாற்றுத் திறனாளி மாணவ, மாணவியர்கள், மிகவும் பின்தங்கிய வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்பதாலும் இவர்களுக்கு அரசால் இலவச கல்வி, உணவு, உடை, உறைவிடம் ஆகியவை வழங்கப்பட்டு வந்தபோதிலும், அவர்களது பொழுது போக்கிற்கெனவும், சமூக சூழ்நிலைப் பற்றி அறியவும் ஏற்படும் வாய்ப்புகள் மிக குறைவாகவே உள்ளதாகவும், மேலும் இவர்கள் கல்வி சார்ந்த பல விவரங்களை அறிந்து கொள்ளவும் சமூகம், பண்பாடு, கலாச்சாரம் தொடர்பான விவரங்களை அறிந்து கொள்ளவும்

கல்வி சுற்றுலா இன்றியமையாததாகிறது எனவும், எனவே, மேற்கண்ட காரணங்களின் அடிப்படையிலும், மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பின் அடிப்படையிலும், தமிழகத்தில் 10 அரசு சிறப்புப் பள்ளிகளில் பயின்று வரும் மாற்றுத் திறன் கொண்ட மாணவ / மாணவியர்கள் பயன் பெறும் வகையில், அவர்களை ஆண்டுக்கு ஒரு முறை, அரசு சிறப்புப் பள்ளிகள் செயல்பட்டு வரும் மாவட்டம் அல்லது அதற்கு அருகில் உள்ள வரலாற்று சிறப்பு மிக்க கலாச்சார, இயற்கை சூழல் சார்ந்த இடங்களுக்கு ஒரு நாள் சுற்றுலா அழைத்து சென்று வர அனுமதி அளிக்குமாறும், அதற்கு ஆகும் செலவினங்களை கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார் :-

| | | |
|---|---|---|
| | 55 இருக்கைகள் கொண்ட பேருந்து ஒரு நாள்<br>**(காலை 8.30 – மாலை 4–30) வாடகை செலவினம்** | **ரூ.7,500/–** |
| 1 | போவதற்கு (Up) 100 கி.மீ) திரும்பி வர (Down) (100 கி.மீ)<br>ஒரு மாணவனுக்கு போக்குவரத்து செலவினம் = **(7500 ÷ 50)** | **ரூ.150/–** |
| 2 | **உணவு செலவினம் (மதிய உணவு மற்றும் சிற்றுண்டி)**<br>**ஒரு மாணவனுக்கு.** | **ரூ.50/–** |
| | **ஒரு மாணவனுக்கு தோராயமாக ஆகும் மொத்த செலவீனம்** | **ரூ.200/–** |

மொத்த மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை = 489
(மாற்றுத் திறன் பாதிக்கப்பட்டோர்–289, செவித் திறன் பாதிக்கப்பட்டோர்–200)

மொத்தச் செலவு = 489 x ரூ.200/-

**= ரூ.97,800/-**

5. மேற்கண்ட மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, பார்வைத்திறன் பாதிக்கப்பட்ட மற்றும் செவித்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளி மாணவ / மாணவியர்களுக்கான, 10 அரசு சிறப்பு பள்ளிகளில் 9ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் **489** மாற்றுத் திறனாளி மாணவ / மாணவியரை கல்விச் சுற்றுலாவுக்கு அழைத்து செல்ல, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளித்தும், இதற்காக, இந்த ஆண்டு ரூ.97,800/– (ரூபாய் தொண்ணூற்று ஏழாயிரத்து எண்ணூறு மட்டும்) செலவினத்திற்கு ஒப்புதல் வழங்கியும் ஆணை வெளியிடுகிறது.

**6.** மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்கு தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

| | | |
|---|---|---|
| (a) | **“2235–சமூகப் பாதுகாப்பும் நலனும்–02–சமூக நலன்–I-திட்டத்தில் சேராதது–101–மாற்றுத் திறனாளிகள் நலன்–AR–காது கேளாதோருக்கான பள்ளிகள்- 54 திட்டமிட்ட பயணங்கள் குறித்த செலவு”.**<br>(து.தொ.கு.2235–02–101–AR–5400) | **ரூ.40,000/–** |
| (b) | **“2235–சமூகப் பாதுகாப்பும் நலனும்–02–சமூக நலன்–I–திட்டத்தில் சேராதது–101–மாற்றுத் திறனாளிகள் நலன்–AA–பார்வையற்றோருக்கான பள்ளிகள் - 54 திட்டமிட்ட பயணங்கள் குறித்த செலவு”**<br>(து.தொ.கு.2235–02–101–AA–5404) | **ரூ.57,800/–** |

7. மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்திற்கான நிதி ரூ.97,800/–, 2010–2011 ஆண்டின் திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதி ஒதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். மேற்படி நிதியொதுக்கம் செய்யப்படுவதை எதிர்நோக்கி, இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அனுமதிக்கப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை தவறாது 2010–2011ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதி ஒதுக்கத்திற்கான கருத்துருவில் சேர்த்தனுப்புமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. மேற்படி சுற்றுலாவை, மாவட்ட ஆட்சியரின் வழிகாட்டுதலுடன், மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் மற்றும் மாவட்ட சுற்றுலா அலுவலர்களுடன் இணைந்து செயல்படுத்திடவும், அவ்வாறு செயல்படுத்தும் போது இயன்றவரை, சுற்றுலாத் துறையின் வாகனம், தங்கும் வசதி, உணவு வசதி மற்றும் இதர சேவைகளைப் பயன்படுத்தவும், சுற்றுலாத் துறையின் மூலமாக மேற்படி வசதிகள் கிடைக்கப் பெறாத இடங்களில், தனியார் தொண்டு நிறுவனங்கள் அல்லது தனியார் வசதிகளை சுற்றுலாத் துறையின் ஒப்புதல் பெற்று, மேற்படி திட்டத்தினை இவ்வாண்டு முதல் நடைமுறைப்படுத்தவும், இவ்வாண்டு கல்விச் சுற்றுலா செயல்படுத்துவதன் மூலம் கிடைக்கப் பெறும் அனுபவங்களைக் கொண்டு, தேவையான மாற்றங்களோடு, எதிர் வரும் ஆண்டுகளில் கல்விச் சுற்றுலாவை தொடர்ந்து செயல்படுத்திடவும், மேலும் இது குறித்து வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்து, அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் அனுப்பி வைத்திடவும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வரசாணை நிதித் துறையின் இசைவுடன், அத்துறையின் அலுவலக சார்பற்ற குறிப்பு எண்.58125/நிதி(சந)/2010, நாள் 26.11.2010 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.1430 (ஆயிரத்து நானூற்று முப்பது)–ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சோ.சு.ஜவஹர்,
அரசுச் செயலாளர்.

**பெறுநர்.**
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–6.
மாநிலக் கணக்காயர், சென்னை–18/35
சுற்றுலா இயக்குநர், சுற்றுலாத்துறை, தமிழ்நாடு சுற்றுலா வளாகம், சென்னை
**நகல்**
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்.
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–6 வழியாக)
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், (திரு.எஸ்.கே.பி.) சென்னை–9
செயலரின் தனிச் செயலர், மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சென்னை–9.
சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை, சென்னை–9
நிதி (வ.செ.பொ.II) / (சந) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.